# மறுசீரமைப்பா? மாநில உரிமைகள் பறிப்பா? - கண்டனக் குரல்கள்!

குறுகிய நோக்கத்துடன் பா.ஜ.க. அரசு செயல்படுகிறது!

## பன்முகத்தன்மையே நாட்டின் பலம்!

### கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் பேச்சு!



சென்னை, மார்ச். 24-

தொகுதி மறுசீரமைப்புக்கான நடவடிக்கையை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே ஒன்றிய பா.ஜ.க.அரசு தொடங்கி உள்ளதாக கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் விமர்சித்துள்ளார்.

மேலும் முதல்வர் பினராயி விஜயன் கூறுகையில், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் முன்னெடுத்திருக்கிறார். அவருக்கு எனது வாழ்த்துகள் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

தொகுதி மறுசீரமைப்பு குறித்த கூட்டு நடவடிக்கைக்குழு கூட்டத்தில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் கலந்து கொண்டார்.

அப்போது பேசிய அவர், பன்முகத் தன்மையே இந்தியாவின் பலம் என்றும், இதனை ஒன்றிய அரசு உணர்ந்து கொண்டு செயல்பட வேண்டும் எனத் தெரிவித்தார். இவ்விவகாரம் குறித்து மாநிலங்களுடன் ஒன்றிய அரசு அர்த்தமுள்ள உரையாடலை தொடங்க வேண்டும் என்ற அவர், தொகுதி மறுசீரமைப்புக் குறித்து தெளிவுபடுத்த வேண்டியது ஒன்றிய அரசின் கடமை என்றும் கூறினார்.

தொகுதி மறுசீரமைப்புக்கான நடவடிக்கையை அரசியல் உள்நோக்கத்துடன் ஒன்றிய பா.ஜ.க.அரசு தொடங்கி உள்ளதாகவும் பினராயி விஜயன் விமர்சித்தார்.

மேலும் அவர் கூறுகையில் தொகுதி மறுசீரமைப்பு என்பது வெறும் எண்ணிக்கை மட்டும் சார்ந்தது அல்ல. இது இந்தியாவின் ஆன்மா சம்பந்தப்பட்ட விவகாரம் பன்முகத் தன்மையே இந்தியாவின் பலம் என்பதை இந்திய அரசு உணர வேண்டும்.

தொகுதி மறு சீரமைப்பு விவகாரத்தில் மாநிலங்களுடன் அர்த்தமுள்ள உரையாடலை ஒன்றிய அரசு தொடர வேண்டும்.

மேலும் விரிவுப்படுத்த வேண்டிய கடமை ஒன்றிய அரசுக்குள்ளது.

**முதலமைச்சருக்கு எனது வாழ்த்துகள்!**

தென் மாநிலங்களின் தொகுதி குறைப்பு பா.ஜ.க.வின் ஆதிக்கத்திற்கு ஏற்கனவே நம் கலாச்சாரத்திலும் மொழிக் கொள்கையும் தலையீடும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தற்போது நம் பிரதிநிதித்துவத்திலும் தலையிடுகிறது. இதனை அனைவரும் ஒன்றிணைந்து தடுத்து நிறுத்த வேண்டியது மிக முக்கியம்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் முன்னெடுத்தி ருக்கிறார். அவருக்கு எனது வாழ்த்துகள் என்று கூறினார்.

தென் மாநிலங்களின்

## அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதா?

### தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி விமர்சனம்!



சென்னை, மார்ச். 24-

மக்கள் தொகை கட்டுப்பாட்டில் சிறப்பாக செயல்பட்ட தென்மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் தண்டனையே தொகுதி மறுசீரமைப்பு என தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி விமர்சித்துள்ளார்.

தொகுதி மறுசீரமைப்பு குறித்த கூட்டு நடவடிக்கைக்குழு கூட்டத்தில் பேசிய தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, எவ்வித ஆலோசனையும் இல்லாமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு தனது விருப்பங்களை நாட்டின் மீது திணிப்பதாகத் தெரிவித்தார். மக்கள் தொகையை சிறப்பாக கட்டுப்படுத்திய தென் மாநிலங்கள் அனைத்து துறைகளில் சிறப்பான வளர்ச்சி பெற்றுள்ளதாகத் தெரிவித்த அவர்,

மக்கள் தொகை கட்டுப்பாட்டில் சிறப்பாக செயல்பட்ட தென்மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கான தண்டனையே தொகுதி மறுசீரமைப்பு என்றும் விமர்சித்தார்.

தொகுதி மறுசீரமைப்பினால்

## பஞ்சாபில் எம்.பி. தொகுதிகள் குறையும்!

### பஞ்சாப் முதல்வர் பகவந்த்மான் குற்றச்சாட்டு!



சென்னை, மார்ச் 24-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் தற்போதைய தொகுதி மறுசீரமைப்பால், பஞ்சாபில் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை குறைய வாய்ப்புள்ளதாக, பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் உரையாற்றிய பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில், அனைத்துக் கட்சிகளை ஒருங்கிணைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்த முன்னெடுப்புக்கு நன்றி தெரிவித்தார்.

நாட்டில் எங்கெல்லாம் வெற்றி வாய்ப்பு உள்ளதோ, அதனை தக்க வைக்க பா.ஜ.க. முயற்சி செய்வதாக விமர்சித்த அவர், ஒன்றிய பா.ஜ.க. அரசின் தற்போதைய தொகுதி மறுசீரமைப்பால், பஞ்சாபில் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை குறைய வாய்ப்புள்ளதாக கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கூடியது தொடக்கம்தான்!

## நாட்டின் ஆன்மா பாதிக்கப்படக்கூடாது!

### கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் பேச்சு!



சென்னை, மார்ச். 24-

தொகுதி மறுவரையறை கூட்டத்தில் கர்நாடக துணை முதல்வர் பேசுகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கூடியது இது தொடக்கம்தான் என்றும் நாட்டின் ஆன்மா பாதிக்கப்படக் கூடாது என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:- எனது முதல் கருத்து மக்களவை தொகுதியை அதிகரிக்க வேண்டாம் என்பது தான் தொகுதி மறுசீரமைப்பால் தென் இந்தயா அரசியல் குரலை இழக்கும் இந்திரா காந்தி ஆட்சியிலும், தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்டது. ஆனால் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படவில்லை.

மக்களவை தொகுதிகள் மறுவரையறை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டிய கூட்டம் சென்னையிலுள்ள கிண்டியில் நடைபெற்றது. இதில், கர்நாடகா சார்பில் பங்கேற்ற பேசிய அந்த மாநில துணை முதலமைச்சர் டி.கே. சிவகுமார், அம்பேத்கர், அண்ணா, பசவண்ணா, நாராயணகுரு வழியில், சமூக நீதி மற்றும் மொழி உரிமைக்காகவும் போராடியதாக தெரிவித்தார். மக்கள் தொகை கட்டுப்பாடு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய தென்மாநிலங்களுக்கு அநீதி இழைக்கக் கூடாது என பேசிய அவர், கல்வி வளர்ச்சி, மருத்துவ துறை வளர்ச்சி உள்ளிட்ட விகிதங்களை கணக்கில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

தொகுதிகள் குறைப்பு என்பது எண்ணிக்கை மட்டுமல்ல என டி. கே. சிவகுமார், நமது அடையாளம், கலாசாரம் என்றும், நாட்டின் ஆன்மா என்றும் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கூடியிருப்பது தொடக்கம்தான் என்றும், வெல்லும் வரை போராடுவோம் என்றும் கூறியதுடன், இது வடஇந்தியா, தென்னிந்தியா மோதல் இல்லை என்றும் தெளிவுபடுத்தினார்.

மக்கள் தொகை அடிப்படையில்

## தொகுதி மறுவரையறை நியாயமற்றது!

### ஒடிசா முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் கண்டனம்!



சென்னை, மார்ச். 24-

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை என்பது நியாயமற்றது என பிஜு ஜனதா தலைவரும், ஒடிசா மாநில முன்னாள் முதலமைச்சருமான நவீன் பட்நாயக் தெரிவித்துள்ளார்.

மக்கள் தொகை அடிப்படையில், நாடாளுமன்ற தொகுதிகளை மறுவரையறை செய்யப்போவதாக தகவல் வெளியானது. இது குடும்பக் கட்டுப்பாடு திட்டம் மூலம் மக்கள் தொகையை குறைத்த மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதி என கூறிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில முதலமைச்சர்கள் உள்ளிட்டோருக்கு அழைப்பு விடுத்து கூட்டம் நடத்தினார்.

சென்னை கிண்டியில் நடைபெற்ற தொகுதி மறுவரையறை குறித்த கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டத்தில், காணொலி காட்சி வாயிலாக பங்கேற்ற ஒடிசா முன்னாள் முதலமைச்சர் நவீன் பட்நாயக், மக்கள் தொகை அடிப்படையில், தொகுதி மறுவரையறை செய்யக்கூடாது என்றார். தொகுதி மறுவரையறை செய்ய மக்கள் தொகை ஒன்று மட்டுமே தகுதி இல்லை எனக் கூறிய நவீன்பட்நாயக், அனைத்துக் கட்சியினரிடமும் பேசி முடிவெடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

நூலின் எடையில் நூற்றாண்டுகள் கனத்தன! தாங்கள் தந்தனுப்பிய

## “தமிழர் நிதி நிர்வாகம் - தொன்மையும் தொடர்ச்சியும்” நூல் - தமிழர்களின் பெருமிதம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கவிப்பேரரசு வைரமுத்து பெருமித கடிதம்!



**சென்னை, மார்ச்.24**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ள கடிதத்தில் “தாங்கள் தந்தனுப்பிய தமிழர் நிதி நிர்வாகம் - தொன்மையும் தொடர்ச்சியும் நூல் தமிழர்களின் பெருமிதம் எனவும், நூலின் எடையில் நூற்றாண்டுகள் கனத்தன” என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம்.

தாங்கள் தந்தனுப்பிய **‘தமிழர் நிதி நிர்வாகம் - தொன்மையும் தொடர்ச்சியும்’** என்ற பெருநூல் என்னை மகிழ்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் ஆளாக்கியது.

நூலின் எடையில் நூற்றாண்டுகள் கனத்தன.

சங்ககாலம் முதல் நிகழ்காலம் வரை தமிழர்களின் நிதிநிர்வாக மாண்புகளை ஒரு வரலாற்றுப் பெட்டகமாக வழங்கியிருக்கிறீர்கள்.

நூலின் உள்ளடக்கமும் உறுதியான கட்டமைப்பும் என்னை இரண்டு கைகளாலும் ஏந்திப் படிக்க வைத்தன. ஒரு பல்கலைக் கழகம் சில ஆண்டுகள் முயன்று செய்ய வேண்டிய முனைவர் பட்ட ஆராய்ச்சியினைத் தமிழ்நாட்டு அரசின் நிதித்துறை குறிப்பிட்ட காலத்திற்குள் நிகழ்த்தி முடித்திருப்பது நெடும்பணியாகும்.

எங்களைப் போன்ற அறிவாசை மிக்கவர்களுக்கு இந்நூலின் தரவுகள் தீராத வரவுகள்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் குறித்தும், கல்லணை குறித்தும், வெள்ளையர் ஆட்சி குறித்தும், சேது மன்னர்களின் கடல் வணிகம் குறித்தும் ஆதாரங்களோடும் அரிய படங்களோடும் தொகுத்திருப்பது தொண்டுகளில் பெரியது.

‘காலந்தோறும் நாணயங்கள்’ என்ற பதிவில் பத்தாம் நூற்றாண்டின் ராஜராஜ சோழனின் நாணயங்களைக் கண்டு கண்களில் ஒற்றிக்கொண்டேன்.

அறிஞர் அண்ணாவின் படிஅரிசித் திட்டமும், கலைஞரின் குடிசைமாற்று வாரியத் திட்டமும் பதிவாகி இருப்பது போலவே, ஏனைய முதலமைச்சர்களின் திட்டங்களையும் இடம்பெறச் செய்திருப்பது நாணயம் தவறாத நடுநிலைமையைக் காட்டுகிறது.

முன்னுரையில் தாங்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, “நாம் கடந்துவந்த பாதை கடினமானதாக இருந்ததே ஒழிய, கடக்க முடியாததாக இருக்கவில்லை” என்பதற்கு இந்த உன்னத நூலே உயிர்ச் சான்று.

மற்ற நூல்களைப் படிப்பேன்; இதைக் கற்கப் போகிறேன்.


இதை வெளியிட ஆணையிட்ட தங்களுக்கும், நிதித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும், நிதித்துறைச் செயலாளர் அவர்களுக்கும் என் வணக்கமும் வாழ்த்தும்.

இந்நூல் தமிழர்களின் பெருமிதம்.

நன்றி.

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து குறிப்பிட்டுள்ளார்.

## அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து, ‘கிக் வாலிபால்’ உலகக் கோப்பை போட்டியை பாட்னாவில் தொடங்கிவைத்த போது, பீஹார் முதல்வர் நிதீஷ் குமார், தேசிய கீதத்தை அவமதித்திடும் வகையில் நடந்து கொண்டார் என்று செய்தி வெளிவந்துள்ளதே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; அந்த நிகழ்ச்சியில் தேசிய கீதம் ஒலித்தபோது முதல்வர் நிதீஷ் குமார், தன் அருகில் இருந்த பீஹார் அரசின் முதன்மைச் செயலாளர் தீபக் குமாரின் தோளைத் தட்டிச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாராம்.**

**அது மட்டுமல்லாமல், தேசிய கீதம் முடிவடையும் முன்பே, மேடையை விட்டு இறங்கிச் சென்றுவிட்டாராம்.**

**இவ்வாறு தேசிய கீதத்தை முழுவதுமாக அவமதித்த பீஹார் முதல்வரை, தேசாபிமானம் அற்றவர் - தேச விரோதி என்று, ஒன்றிய பா.ஜ.க.வினர் ‘ லேபிள்’ ஒட்டிவிட மாட்டார்கள். அவர் அவர்களது கூட்டணியில் உள்ளவர் ஆயிற்றே !**

**மேலும் நிதீஷ் குமார் ஆதரவு, ஒன்றிய பா.ஜ.க. ஆட்சிக்கு அவசியம் ஆயிற்றே !**

**ஒன்றிய பா.ஜ.க.வைப் பொறுத்தவரை, தேசாபிமானம் என்பது ஆளுக்கு ஆள், இடத்துக்கு இடம், வேறுபாடு உடையதாயிற்றே !**